

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

முதலாயிரம்

# பெரியாழ்வார் திருமொழி

## முதல்பத்து

## 1–ஆம் திருமொழி – திருப்பல்லாண்டு

_________*__________

* பல்லாண்டுபல்லாண்டு பல்லாயிரத்தாண்டு *
பலகோடிநூறாயிரம்
மல்லாண்டதிண்தோள் மணிவண்ணா! * உன்
+ சேவடிசெவ்விதிருக்காப்பு (1)

அடியோமோடும்நின்னோடும் பிரிவின்றிஆயிரம்பல்லாண்டு *
வடிவாய்நின்வலமார்பினில் வாழ்கின்றமங்கையும்பல்லாண்டு *
வடிவார்சோதிவலத்துறையும் சுடராழியும்பல்லாண்டு *
படைபோர்புக்குமுழங்கும் அப்பாஞ்சசன்னியமும்பல்லாண்டே. (2)

வாழாட்பட்டுநின்றீருள்ளீரேல் வந்துமண்ணும்மணமும்கொண்மின் *
கூழாட்பட்டுநின்றீர்களை எங்கள்குழுவினில்புகுதலொட்டோம் *
ஏழாட்காலும்பழிப்பிலோம்நாங்கள் இராக்கதர்வாழ் * இலங்கை
பாழாளாகப்படை பொருதானுக்குப் பல்லாண்டுகூறுதுமே. (3)

ஏடுநிலத்தில் இடுவதன்முன்னம்வந்து எங்கள்குழாம்புகுந்து *
கூடுமனமுடையீர்கள்வரம்பொழி வந்துஒல்லைக்கூடுமினோ *
நாடும்நகரமும்நன்கறிய நமோநாராயணாயவென்று *
பாடுமனமுடைப்பத்தருள்ளீர்! வந்துபல்லாண்டுகூறுமினே. (4)

அண்டக்குலதடுக்கதிபதியாகி அசுரரிராக்கதரை *
இண்டைக்குலத்தைஎடுத்துக்களைந்த இருடீகேசன்தனக்கு *
தொண்டைக்குலத்திலுள்ளீர்! வந்தடிதொழுதுஆயிரநாமம்சொல்லி *
பண்டைக்குலத்தைத்தவிர்ந்து பல்லாண்டுபல்லாயிரத்தாண்டென்மினே. (5)

எந்தைதந்தைதந்தைதந்தைதம்மூத்தப்பன் ஏழ்படிகால்தொடங்கி *
வந்துவழிவழி ஆட்செய்கின்றோம் * திருவோணத்திருவிழவில்
அந்தியம்போதிலரியுருவாகி அரியையழித்தவனை *
@ பந்தனைதீரப்பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்றுபாடுதுமே. (6)

தீயிற்பொலிகின்றசெஞ்சுடராழி திகழ்திருச்சக்கரத்தின் *
கோயிற்பொறியாலேஒற்றுண்டுநின்று குடிகுடிஆட்செய்கின்றோம் *

மாயப்பொருபடைவாணனை ஆயிரந்தோளும்பொழிகுருதி
பாய * சுழற்றிய ஆழிவல்லானுக்குப் பல்லாண்டுகூறுதுமே. (7)

நெய்யிடைநல்லதோர்சோறும் நியதமும் அத்தாணிச் # சேவகமும் *
கையடைக்காயும்கழுத்துக்குப்பூணொடு காதுக்குக்குண்டலமும் *
மெய்யிடநல்லதோர்சாந்தமும்தந்து என்னைவெள்ளுயிராக்கவல்ல *
பையுடைநாகப்பகைக்கொடியானுக்குப் பல்லாண்டுகூறுவனே. (8)

உடுத்துக்களைந்தநின்பீதகவாடையுடுத்துக் கலத்ததுண்டு *
தொடுத்ததுழாய்மலர்குடிக்களைந்தன சூடும்இத்தொண்டர்களோம் *
விடுத்ததிசைக்கருமம்திருத்தித் திருவோணத்திருவிழவில் *
படுத்தபைந்நாகணைப்பள்ளிகொண்டானுக்குப் பல்லாண்டுகூறுதுமே. (9)

எந்நாள்எம்பெருமான் உந்தனக்கடியோமென்றெழுத்துப்பட்ட
அந்நாளே * அடியோங்களடிக்குடில் வீடுபெற்றுஉய்ந்ததுகாண் *
சந்நாள்தோற்றித் திருமதுரையுள்சிலைகுனித்து * ஐந்தலைய
பைந்நாகத்தலைப்பாய்ந்தவனே! உன்னைப்பல்லாண்டுகூறுதுமே. (10)

$ அல்வழக்கொன்றுமில்லா அணிகோட்டியர்கோன் * அபிமானதுங்கன்
செல்வனைப்போலத் திருமாலே! நானும்உனக்குப்பழவடியேன் *
நல்வகையால்நமோநாராயணாவென்று நாமம்பலபரவி *
பல்வகையாலும்பவித்திரனே! உன்னைப்பல்லாண்டுகூறுவனே. (11)

* பல்லாண்டென்றுபவித்திரனைப் பரமேட்டியை * சார்ங்கமென்னும்
வில்லாண்டான்தன்னை வில்லிபுத்தூர்விட்டுசித்தன்விரும்பியசொல் *
நல்லாண்டென்றுநவின்றுரைப்பார் நமோநாராயணாயவென்று *
பல்லாண்டும்பரமாத்மனைச் சூழ்ந்திருந்தேத்துவர்பல்லாண்டே. (12)

அடிவரவு : பல் அடி வாழ் ஏடு அண்டம் எந்தை தீ நெய் உடுத்து எந்நாள் அல்வழக்கு பல்லாண்டு வண்ணம்.

[ஆதிகூறுது, அநந்தரம் கூறுமின், அண்டம் என்மின், எந்தை பாடுதும், தீ உடுத்து எந்தாள் கூறுதும், நெய்யும் அல்லும் கூறுவனே.]

+ செவ்வடி என்றும் பாடம். @ பந்தனை அனுக்கம், பிள்ளைகளுக்குவரும்வியாதி
# அத்தாணி-பிரியாமை. $ இப்பாசுரம், சிலர் இரட்டித்து சேவிப்பர்.